www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

20.03.2022

ஞானம் 5 – ஒலி 12



# இயேசுவில் உறுதியாய் நிலையாய்





அருட்பணி.சைமன் பீட்டர்

# ஆடுகள்கூட தன் ஆயனை அறியும்...

அன்பிற்கினிய ஞான ஒலி வாசக நண்பர்களே, உங்கள் அனைவரையும் நம் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒவ்வொரு வினாடியும் கோடிக் கணக்கான காலப் பிரிவுகளால் ஆனது. அந்த கோடியின் ஒவ்வொரு பிரிவிலும் இறையாற்றலே செயல்படுகின்றது. இந்த வரியைப் படிக்கின்ற வினாடிக்கு முன் கோடிக் கணக்கான ஆண்டுகள் கடந்து போயிருக்கின்றன, இப்போது நாம் கடந்து வந்த வினாடியையும் சேர்த்துதான். இந்த காலத்தின் அதிவேகப் பாய்ச்சலுக்கிடையேதான் அந்தக் காலத்தின் வேகத்தையும், அது ஏற்படுத்தும் சத்தத்தின் ஒலியைக்கூட நாம் அறியாமல், நாம் அடுத்த வினாடியைக் கடந்து போய்க் கொண்டிருக்கின்றோம்.. இந்த பெருஅண்டத்தின் மொத்த வடிவத்தின் சிறு வடிவமாகத்தான் நாம் இருக்கின்றோம்.

அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் இருக்கின்றது. அண்டம் வெளியில் இல்லை, மாறாக நாமே அண்டத்தின் சிறு வடிவாய் இருக்கின்றோம். அண்டத்தின் பெரு மனத்தின் நவீன வடிவமே நம் மனமாக, ஆழ்மனமாக இருக்கின்றது. அதாவது இயற்கையின் மொத்த ஆற்றலாகவும், அதன் முழுமையாகவும் நாம் இருக்கின்றோம்.

கடவுள் நம்மை இந்த படைப்பின் சிகரமாகப் படைத்திருப்பதால்தான் இத்தகைய மாண்பு நமக்குக் கிடைத்துள்ளது.

ஆனால் இல்லமையிலும், இயலாமையிலும், எளிமையிலும், இறைச்சார்பு நிலையிலும்தான் ஒருவர் தன்னை அடைய முடியும் என்று கடவுள் சொல்வது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கின்றது.

மற்றெல்லாரையும்விட பணபலத்திலும், செலவாக்கிலும், ஆளுமையிலும், அதிகாரப்பலத்திலும் முந்தி இருப்பதே ஒருவருக்குப் பெருமை, சிறப்பு என்று இவ்வுலகம் கற்றுத் தருகின்றது. இந்தப் பேராசையே மனித குலத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. மற்றவர் தன்னைப் தலை நிமிர்ந்து பார்க்கும்படி, உயர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக இரவு பகலாக மனிதன் ஓடிக் கொண்டிருக்கின்றான். தன்னை யாரும் விஞ்சிவிடக்கூடாது என்பற்காக, யாரையும் கவிழ்க்க, தள்ளிவிட, தடுக்க, வீழ்த்தி அழிக்கின்றார்கள் சுயநலக்காரர்கள். இதுவே உலகம் கற்பிக்கும் வாழ்க்கை ஆனால் இயேசுவின் வழியோ இதற்கு முற்றிலும் மாறாக இருக்கின்றது.

> இயேசு அமர்ந்து பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும், அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும் என்றார்.
> – மாற்கு 9/35

அதுபோலவே அவர் இறைமகனாய் இருந்தும் தன்னை எளிமையாக்கி, வெறுமையாக்கி மனிதனாய், ஏழையாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். தலைசாய்க்கக்கூட இடமில்லாது, ஒரு நாடோடியைப்போல வாழ்ந்தார். மனிதரில் ஒருவராக எல்லாவித விமர்சனத்தின் மத்தியிலும், எதிர்ப்புகளையும் சந்தித்தே வாழ்ந்தார்.

அவர் வாழ்ந்த 33 ஆண்டுகளிலும், மக்கள் தன்னை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லையே என்ற ஏமாற்றத்திலும், தன்னைப் புரிந்து கொள்ளாத, ஆதாயத்தையும், முதன்மையான பதவிகளையும், செல்வச் செழிப்பான எதிர்காலத்தையுமே எதிர்பார்த்திருந்த தனது சீடர்களையும் சகித்துக் கொண்டே வாழ்ந்தார். தனது சீடர்களில் ஒருவனால் காட்டிக் கொடுக்கப்படுவோம், தனது முதன்மையான சீடனாய்த் தேர்ந்தெடுத்த சீமோனின் மறுதலிப்பையும் முன்னரே அறிந்திருந்தும், அந்த மன அழுத்தங்களோடே நன் முகத்தோடு அவர்களிடம் பழகினார். இறுதியில் கைவிடப்பட்டுத் தனியே நின்ற சமயத்தில்தான் அவர் கெத்சேமேனித் தோட்டத்தில் நிராதரவாய் இரத்தம் வியர்வையாய் சொட்டச் சொட்ட துன்பப்பட்டார்.

இறைமகன், நம்பிக்கைத் துரோகத்தையும், உதாசீனத்தையும், அனாதை உணர்வையும் அதன் உச்சத்தையும் சந்தித்தே முழு மனிதனாய் வாழ்ந்தார் இயேசு.

எல்லாச் சூழலிலும் தன் தந்தையின் துணை ஒன்றை மட்டுமே அவர் தேடினார். தான் ஒரு மனிதனாய் வாழ்வதையும், மனிதர் தன்னைப்போலவே வாழ வேண்டும் என்ற சிந்தனையையும், பொறுப்புணர்வையும் மனதில் கொண்டே வாழ்ந்தார். சீடர்களுக்கு, பரலோகத் தந்தையின் மீதான பற்றையும், அவரிடம் எவ்வாறு பற்றுக் கொண்டிருக்க வேண்டும்,செபத்தில் ஒன்றித்திருக்க வேண்டும், அதனால் எவ்வாறு வலிமை பெற வேண்டும் என்பதையும் அவர் அவர்களுக்கு வாழ்ந்து காண்பித்ததோடு, அவரே அதற்கு முதல் வாழ்க்கைப் பாடமாகவும் வாழ்ந்தார்.

ஆண்டவரைத் தேடுங்கள் நீங்கள்
வாழ்வீர்கள்
- ஆமோஸ் 5/6

என்ற இறைவாக்கினரின் கூற்றுப்படி அவர் எப்பொழுதும் தந்தையோடவே இணைந்திருந்தார். ஆனால் பரலோகத்தந்தை தன் மகன் இயேசு கெத்சேமேனித் தோட்டத்தில் தனக்கு உதவ வேண்டும் என்ற கதறியபோது கடின மௌனம் காத்தார். ஆண்டவரைத் தேடினால் நீங்கள் வாழ்வீர்கள் என்ற வசனம் பொய்யாகிப்போனதே என்று நாம் நினைக்கலாம். ஆனால் புனித பேதுரு பிற்காலத்தில் இந்த நிகழ்வை மனதில் வைத்தும் இறுதியில் பரிசுத்தப் பரலோகத் தந்தை தன் மகனின் தியாகத்திற்கு ஈடாக என்ன செய்தார் என்பதையெல்லாம் நேரடியாகப் பார்த்து, இறைமகனின் கதறலுக்கு ஏன் இறைவன் செவி சாய்க்கவில்லை? தந்தையின் மௌனத்திற்குக் காரணமென்ன? இறைமகனின் கீழ்ப்படிதலின் பலன் என்ன? அவற்றின் உண்மைத் தன்மையை பிற்காலத்தில் தன் கடிதத்தில் இவ்வாறு எழுதினார்....

கடவுளின் வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள். அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார். உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்.-- 1 பேதுரு 5/6





# விவிலியம் அறிவோம் - 30

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF


## ஆபிரகாமும் அபிமெலக்கும்

ஆபிரகாமும் அபிமெலக்கும் கதை தொநூ 20 வது பிரிவில் வருகிறது. எபிரோனுக்கு அருகில் உள்ள மம்ரே இன்ற இடத்தில் உள்ள தேவதாரு மரங்களருகே வாழ்ந்து வந்த ஆபிரகாம் அங்கிருந்து நெகேபுக்குச் செல்கிறார். அங்கே காதேசுக்கும் சூருக்கும் இடையில் உள்ள இடத்தில் தங்குகின்றார். அங்கிருந்து சிறிது காலம் கெராரில் தங்குகிறார். அப்போது கெராரின் அரசனாக அபிமெலக்கு என்பவன் இருக்கின்றான். அபிமெலக்கு என்ற பெயர் பெலிஸ்தியர்கள் நடுவில் பிரசித்திபெற்ற பெயராக இருந்தது. ஆபிரகாமும் அபிமெலக்கும் கதை தொநூ 12:10-20 இல் வருகின்றஆபிரகாம் - பார்வோன் கதையின் மறுபதிப்பாக உள்ளது என பல அறிஞர்களும் கருதுகின்றனர். தொநூ 12:10-20 இல் ஆபிரகாமை எகிப்தில் சந்திக்கிறோம். ஆண்டவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட ஆபிரகாம் கானான் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதால் எகிப்து செல்கிறார். கானான் நாட்டில் வாழ்ந்தவர்கள் பஞ்ச காலங்களில் உணவுதேடி எகிப்திற்குச் செல்வது இயல்பானஒன்றாக இருந்தது. எகிப்திய ஆவணங்கள் இதைஉறுதிசெய்கின்றன. கானான் நாட்டை ஆபிரகாமின் வழி மரபினருக்கு அளிப்பதாக ஆண்டவர் வாக்கு கொடுக்கின்றார் (தொநூ 12:7). எனவேபஞ்சம் பிழைப்பதற்காகஆபிரகாம் எகிப்து செல்வது ஏற்கக் கூடியதாக இல்லை. அதுமட்டுமல்ல ஆபிரகாம் தனது மனைவியான சாராவிடம். நீ கண்ணுக்கு அழகானவள் என்பது எனக்குத் தெரியும். எகிப்தியர் உன்னைக் காணும் பொழுது இவள் அவனுடைய மனைவி எனச்சொல்லி என்னைக் கொன்றுவிடுவர்; உன்னையோ உயிரோடு விட்டுவிடுவர். உன் பொருட்டு எனக்கு நல்லது நடக்கவும் உன்னால் என் உயிர் காப்பாற்றப்படவும் நீ என் சகோதரி எனச்சொல்லிவிடு (தொநூ 12:11-13) எனக் கூறி தனது மனைவியின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிப்பதும் அவரை நமது கண்கள் முன் தாழ்த்துகின்றது.

ஆபிரகாம் தனது உயிருக்குப் பயப்படுகிறார். சாராவின் அழகைக் காணும் பார்வோன் சாராவை அடைவதற்காக தன்னைக் கொன்றுவிடுவான் என நினைக்கிறார். தன்னை அழைத்து, வழிநடத்துகின்ற கடவுள் மீது ஆபிரகாம் கொண்டிருந்த நம்பிக்கை இங்கே வெளிப்படையாகத் தெரியவில்லை. ஒருவெளை அவருடைய உள் மனதில் அந்த நம்பிக்கை இருந்திருக்கலாம். அவர் சாராவைப் பொய் சொல்லத் தூண்டுகிறார். ஆபிரகாம் நினைப்பது போலவே அனைத்தும் நடக்கிறது. எகிப்தியர்கள் சாராவின் அழகைக் கண்டு பார்வோனுக்கு அறிவிக்கின்றனர். சாராவும் ஆபிரகாமை தனது சகோதரன் எனக் கூறுகின்றாள். சாரா ஆபிரகாமின் சகோதரி என எண்ணிய பார்வோன் சாராவைத் தனது அந்தப்புரத்திற்கு கவர்ந்து செல்கிறான். சாராவின் பொருட்டு பார்வோன் ஆபிரகாமுக்கு பல நன்மைகளையும் செய்கிறான்: ஆடு மாடுகளையும் கழுதைகளையும், வேலைக் காரரையும், வேலைக்காரிகளையும், பெண் கழுதைகளையும் ஒட்டகங்களையும் அவருக்குக் கொடுத்தான் (தொநூ 12:16) என வாசிக்கிறோம். பார்வோன் சாராவைத் தனது அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றதை ஆண்டவர் ஏற்கவில்லை. பார்வோனின் குடும்பத்தில் ஆண்டவர் தலையிடுகிறார்; பார்வோனின் குடும்பத்தை

கொள்ளை நோயால் தண்டிக்கிறார். இங்கே ஒன்றைநாம் கவனிக்க வேண்டும். பார்வோன் சாராவைஆபிரகாமின் சகோதரி என நினைத்துதான் அவனது அந்தப்புரத்திற்குக் அழைத்துச் செல்கின்றான். அவள் ஆபிரகாமின் மனைவி என்பது அவனுக்குத் தெரியாது. என்றாலும் ஆண்டவர் அவனைத் தண்டிக்கின்றார். ஆபிரகாமை அவர் தண்டிக்கவில்லை. ஆபிரகாம் பொய் கூறியதை அறிந்த பார்வோன் ஆபிரகாமை அழைத்து அவரிடம் காரணம் கேட்கின்றான். சாரா ஆபிரகாமின் மனைவி என்பதை அறிந்து கொள்கின்றான். இறுதியில் பாதுகாப்புடன் சாராவை ஆபிரகாமுடன் அனுப்புகின்றான்.

பண்டைய மேற்காசியாவில் வாழ்ந்த குரியர்கள் (Hurrians) என்றழைக்கப்பட்ட மக்களிடம் மனைவியையே சகோதரியாகத் தத்தெடுக்கும் பழக்கம் இருந்தது. இத்தகைய பழக்கம் மனைவியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க கணவனுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுத்தது; அதே வேளையில் சாதாரண மனைவியைவிட அதிகமான பாதுகாப்பையும் சிறப்புரிமைகளையும் மனைவிக்கும் அளித்தது. காலப்போக்கில் இந்தப் பழக்கம் மறைந்துவிட்டது. இந்தக் கதையை எழுதும் யாவேமரபு ஆசிரியர் அந்தப் பழக்கத்தை அறிந்தவராக இருந்தாரா என்பது தெரியவில்லை. ஆசிரியர் ஆபிரகாமின் செயலைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை மறாக அவரது அறிவை மெச்சுபவராகக் காட்சியளிக்கின்றார். ஆபிரகாமும் சாராவும் தவறு செய்த போதும் அவர்கள் ஆண்டவரின் பாதுகாப்பில் உள்ளார்கள் என்பது தெரிகிறது. கடவுள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறு மட்டும் கடவுள் அவர்களின் வாழ்வில் தலையிடுவார்; அவர்களைப் பாதுகாப்பார். இந்தக்கதை சில முரண்பாடுகளையும் வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, தன்னையும் தன் குடும்பத்தையும் வதைத்த கொள்ளை நோய் சாராவின் நிமித்தமே வந்தது என்பதை பார்வோன் எவ்வாறு அறிந்து கொண்டான்? சாரா ஆபிரகாமின் மனைவி என்பதை பார்வோன்; எவ்வாறு அறிந்து கொண்டான்? போன்றகேள்விகளுக்குளந்தப்



பதிலும் இல்லை. இன்னொரு முக்கியமான கேள்வி. தொநூ 12:4 மற்றும் 17:17 உடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சாராவுக்கு அறுபத்தைந்து வயது ஆகியிருக்க வேண்டும். ஆனால் கதை அப்படியொரு தோற்றத்தை நமக்குத் தரவில்லை. இக்கதையை எழுதிய ஆசிரியருக்கு இந்த முரண்பாடுகள் முக்கியமில்லாதவையாக இருக்கலாம். ஆனால் அதை வாசிக்கும் நமக்கு அவை கேள்விகளாக தொங்கி நிற்கின்றன. ஆசிரியரின் நோக்கமெல்லாம் அழைக்கப்பட்டவர்களின் வாழ்வில் கடவுள் தலையிட்டு அவர்களைப் பாதுகாக்கிறார் என்பதைக் கூறுவதுதான்.

தொநூ 20:1-18 இல் வருகின்ற அபிமெலக்கும் ஆபிரகாமும் கதை ஏலோகீம் மரபிலிருந்து வருகிறது. இக்கதை ஏலோகீம் மரபிலிருந்து வருகிறது என்பதற்கு இரண்டு முக்கியமான ஆதாரங்கள் உள்ளன. முதலாவதாக, கடவுளைக் குறிப்பதற்கு கடவுள் (ஏலோகீம்)என்றசொல் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது, கனவுகள் மூலமாக கடவுள் தொடர்புகொள்கிறார். தொநூ 12 இல் வருகின்ற கதையுடன் ஒப்புமைப்படுத்தும் போது ஏலோகீம் மரபு ஆசிரியரின் முன் நோக்கங்கள் தெளிவாகத் தெரிகின்றன. தொநூ 12 இல் வருகின்ற கதையில் எதற்காக ஆபிராகம் தனது மனைவியான சாராவை சகோதரி எனக் குறிப்பிடக் கூறினார் என்பதற்கான காரணங்கள் கொடுக்கப்படுகின்றன. அதைப்போல சாரா எவ்வாறு பார்வோனின் அந்தப்புரத்திற்கு கொண்டு வரப்பட்டாள் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. ஆனால் தொநூ 20 இல் வருகின்ற கதையில் இந்த விளக்கங்கள் இல்லை. ஆசிரியரின் கவனமெல்லாம் அபிமெலக்கின் குற்றத்தின் மீதும் எவ்வாறு

அவன் விடுவிக்கப்பட்டான் என்பதன் மீதுமே உள்ளன. அபிமெலக்கு சாராயார் என்ற உண்மையை அறியாமல் தான் அவளைத் தன் மனைவியாக்க விரும்புகிறான் என்பது தெரிகிறது, என்றாலும் அவன் குற்றவாளியாகக் கருதப்படுகிறான். அடுத்தவனின் மனைவியை தனது அந்தப்புரத்திற்கு அழைத்து வந்தது, அது அறியாமல் செய்த செயலாக இருந்தாலும், குற்றமாகக் கருதப்படுகிறது. அதற்குத் தண்டனைகட்டாயம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இங்கேயும் ஆபிரகாமின் செயல் குற்றமாகக் கருதப்படவில்லை. அபிமெலக்கிற்காக வேண்டுதல் புரியும் அளவிற்கு ஆபிரகாம் நீதிமானாகப் பார்க்கப்படுகிறார். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதால் ஆபிரகாம் ஒரு இறைவாக்கினராக,நடுநிலையாளராகக் காட்டப்படுகிறார். இரண்டுகதைகளிலும் இன்னும் சிலவித்தியாசங்களும் உள்ளன.

தொநூ 12:10-20 வரையுள்ளகதையில் பார்வோன் சாராவுடன் உறவுகொண்டாரா இல்லையா என்பது வெளிப்படையாகக் கூறப்படவில்லைஆனால் ஏலோகீம் மரபிலிருந்து வருகின்ற கதையில் அபிமெலக்கு சாராவைத் தொடுமுன்னே கடவுள் தலையிடுகிறார் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் அபிமெலக்கு அளிக்கும் வெகுமதிகள் ஆபிரகாம் மற்றும் சாராவின் மகத்துவத்திற்கும் மாட்சிக்கும் சாட்சியாகநிற்கிறது. யஸவே மரபிலிருந்து வருகின்றகதையில் சாரா பார்வோனின் அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போதே ஆபிரகாமுக்கு பல நன்மைகள் செய்யப்படுகின்றன. மேலும் ஏலோகீம் மரபு ஆசிரியர் ஆபிரகாமின்; செயலை நியாயப்படுத்த முயல்கிறார்; எனவேதான் சாரா உண்மையிலேயே ஆபிரகாமின் சகோதரி எனக் கூறுகிறார். யாவே மரபு ஆசிரியர் ஆபிரகாமின் செயல்களுக்கு எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை. தொநூ 26:6-11 வரையுள்ள இறைச் சொற்றொடர்களிலும் இதே போல் ஒருகதையைப் பார்க்கிறோம். இக்கதையின் கதாநாயகர்களாக ஈசாக்கும் அபிமெலக்கும் வருகின்றனர். ஆபிரகாமின் காலத்தில் பெரியபஞ்சம் ஏற்பட்டதுபோலவே ஈசாக்கின் காலத்திலும் பஞசம் ஏற்படுகின்றது. அக்கால கட்டத்தில் ஈசாக்கு கெராரின் அரசனான அபிமெலக்கைக் காண்பதற்காக கெராருக்குச் செல்கின்றார் (தொநூ 26:1). அதன்பின் அவர் அங்கேயே தங்கிவிடுகின்றார் (தொநூ 26:6). கெராரில் வாழ்ந்த காலத்தில் ஈசாக்கு தன் மனைவியை அவள் என் சகோதரி என அங்குள்ளவர்களுக்கு அறிமுகம் செய்கின்றார். ஒருநாள் ஈசாக்குதன் மனைவியான




ரெபேக்காவைக் கொஞ்சிக் கொண்டிருப்பதை அபிமெலக்கு காண்கின்றான். உன் மனைவியை அவள் என் சகோதரி என ஏன் கூறினாய்? என அபிமெலக்கு ஈசாக்கிடம் கேட்டபோது ஒருவேளை அவளை முன்னிட்டு நான் சாக நேரிடலாம் என்று நினைத்ததே காரணம் (தொநூ 26:9) எனப் பதிலளிக்கின்றார். அபிமெலக்கு அவரது செயலை ஏற்கவில்லை ஆனாலும், இந்த மனிதனையோ அவன் மனைவியையோ தொடுபவன் கொல்லப்படுவது உறுதி என்று அபிமெலக்கு தன் மக்கள் அனைவரையும் எச்சரிக்கின்றான்.

விவிலியத்தில் வருகின்ற இந்தக் கதைகள் நமது வாழ்விற்குத் தேவையான பல செய்திகளை தருகின்றன. முதலாவதாக, அச்சம் வாழ்வில் நாம் விரும்பாத பலதீமைகளைச் செய்வதற்குக் காரணமாக இருக்கிறது என்ற செய்தியைத் தருகிறது. எகிப்தில் வாழ்ந்த போதும், கெராரில் வாழ்ந்த போதும் அச்சத்தின் காரணமாகவே தனது மனைவியிடம் நீ என் சகோதரி எனக் கூறுவதற்கு ஆபிரகாம் பணிக்கிறார். ஆபிரகாம் பார்வோன் தன்னைக் கொன்றுவிடுவான் என அஞ்சியதால் தான் தனது மனைவியை அவள் என் சகோதரிஎனக் கூறுகிறார்;அதனால் தனது மனைவிக்குத் தவறு இளைக்கப்படலாம் என்பதை அறிந்தவராகவே அவர் இருக்கிறார். அதைப்போல கெராரில் அவர் தங்கிய போதும் இந்தச் சிந்தனையே அவரில் இருக்கிறது. நமது வாழ்விலும் அச்சம் பல தீமைகளுக்குக் காரணமாக அமையலாம்; அதனால் நாம் செய்யவிரும்பாத பல காரியங்களையும் செய்யலாம். இன்றைய சமூகத்தை நோக்குகையில் அச்சத்தினால்தான் மக்களில் பலரும் பல அடக்கு முறைகளுக்கும் ஒடுக்குதல்களுக்கும் உள்ளாகின்றனர் என்பதைப் பார்க்க முடிகிறது. அச்சத்தில் வாழ்பவன் இறந்தவனுக்குச் சமம். கடவுளுக்கு மட்டுமே நாம் அஞ்ச வேண்டும். ஆண்டவர் இயேசு தனது சீடர்களிடம், ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்கவல்லவருக்கே அஞ்சுங்கள் (மத்தேயு 10:28) எனக் கூறுகிறார். எனவே அச்சம் தவிர்த்து வாழ்வோம்.

இரண்டாவதாக, சாரா பார்வோனால் கவர்ந்து செல்லப்பட்டு அவனது அந்தப்புரத்தில் இருந்த போதும், கெராரில் அபிமெலக்கு சாராவின் மீது ஆசைப்பட்ட போதும் ஆண்டவர் தலையிட்டு அவளைக் காக்கின்றார். ஆபிரகாமும் சாராவும் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்; எனவே ஆண்டவரே அவர்களுக்கு பாதுகாப்பு அரணாக இருக்கிறார். அவர்களுக்கு எந்தத் தீமையும் நேர்ந்துவிடாமல் காக்கிறார். அவர்களோடு அவர் பயணிக்கிறார். ஆண்டவரின் இந்தச் செயல்கள் அவர்தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஒருபோதும் கைவிடுவதில்லை. பகைவர்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்கிறார்; அவர்களோடு அவர் நடந்துவருகிறார். அவர்களை வழிநடத்துகிறார் என்ற செய்திகளைத் தருகின்றன. நமது வாழ்விலும் இதைநாம் அனுபவிக்க முடியும். திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் ஆண்டவரால் அழைக்கப்பட்டவர்கள் தான்; எனவே ஆண்டவரின் உடனிருப்பையும் பாதுகாப்பையும் பெற முடியும். அதற்கு நாம் ஆண்டவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஆபிரகாமும் சாராவும் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டவர்கள்; எல்லாச் சூழ்நிலைகளிலும் அந்த நம்பிக்கையிலே நிலைத்திருந்தவர்கள். நாமும் ஆண்டவரிலே நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் நிச்சயமாக ஆண்டவரின் பாதுகாப்பையும், பராமரிப்பையும், உடனிருப்பையும் அனுபவிக்க முடியும்.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF







# மறையுரை

அருட்பணி. S. லூயிஸ் பிரிட்டோ
பங்குத்தந்தை
புனித சவேரியார் கோயில்
பேரூர் பங்கு
குளித்தலை, கரூர் மாவட்டம், திருச்சி மறைமாவட்டம்.

## தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு
20-03-2022

**வி.ப. 3 : 1-8, 13-15, / 1கொரி. 10:1-6, 10-12 / லூக். 9:28-36**

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே இன்று தவக்காலத்தின் 3வது ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்கின்றோம்.

இன்றைய வாசகங்களின் மையச்செய்தி

1. கடவுள் கருணையும், இரக்கமும் கொண்டவர்.

2. கடவுள் பாவிகள் மனம் திருந்த வாய்ப்பு அளிப்பவர்.

3. கடவுள் தருகின்ற வாய்ப்புகளை பயன்படுத்தாமல் புறக்கணித்து விட்டோம் என்றால் நாம் நிச்சயம் அழிவை சந்திக்க நேரிடும்.

நமது அன்றாட வாழ்க்கையில் ஏராளமான விபத்துக்களைப்பற்றி,போர்களைப் பற்றி, இயற்கை பேரழிவுகளைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அப்போதெல்லாம் அவர்கள் எல்லாரும் பாவிகள் அவர்களை கடவுள் தண்டிக்கிறார் என்று முடிவுக்கு சில நேரங்களில் நாம் வருகிறோம். ஆனால் நம் ஆண்டவர் இயேசுவின் பார்வையில் அவர் இந்த அழிவுகளை மனம் மாறுவதற்காகக் கடவுள் நமக்குக் கொடுக்கும் வாய்ப்பாக எடுத்துக் கொள்ள நம்மை அழைக்கிறார். எனவே இயேசு, கடவுளைக் கருணை மிக்கவராகவும் இரக்கம் மிக்கவராகவும் பாவிகள் மனந்திரும்ப வாய்ப்பு அளிப்பவராகவும் காண்கிறார்.

**கடவுளின் கருணை:**

இன்றைய முதல் வாசகத்தில் எப்படி கடவுள் எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் மக்களின் அழுகுரலைக் கேட்டு அவர்களை மீட்டு விடுதலை வாழ்வுக்கு அதாவது பாலும் தேனும் பொழிகின்ற வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்து வந்தார் என்று விடுதலைப் பயண நூலிலிருந்து நாம் வாசிக்கக் கேட்டோம். இதிலே ,கடவுளின் கருணையை நாம் காண்கிறோம்.

**திருப்பாடல் 94 கூறுகிறது:**

'ஆண்டவரின் உரிமைச்சொத்தாம் நம்மை என்றுமே கைவிடமாட்டார். அவரை நம்பியே வாழ்பவருக்கு அரணாக அவர் இருப்பார். நீதியும் நேர்மையும் செழித்திட அருள் புரிவார். செவியை படைத்த கடவுள் நமது விண்ணப்பத்தை கேளாது இருப்பாரோ? கண்களை படைத்த கடவுள் நம் துன்பங்களை காணாது இருப்பாரோ ?நிச்சயம் நமது விண்ணப்பங்களைக் கேட்பார். நம் துன்பங்களைக் காண்பார் .நம்மை எல்லா ஆபத்துகளிலிருந்தும் விடுவிப்பார்.

**கடவுளின் இரக்கம்:**

புனித பெரிய கிரகோரியார் கூறுவார், 'பொறுமையே எல்லா நற்குணங்களும் ஆணிவேர்' என்று.

கடவுள் நம்மீது கொண்டுள்ள இரக்கத்திற்கு அடிப்படை காரணம் அவருடைய பொறுமை தான். அவர் நம்மீது வைத்திருக்கின்ற அன்பு தான் அந்த பொறுமைக்கும் காரணம்.

இன்றைய நற்செய்தி வாசகம் ஆண்டவர் எவ்வளவு பொறுமையாக இருந்து தீயவர்கள் அழிந்து விடக்கூடாது மாறாக மனம் திரும்பவேண்டும் என்பதற்காக வாய்ப்பு கொடுக்கிறார் என்பதைக் கூறுகிறது. இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்தி கடவுளின் பொறுமையை பயன்படுத்தி மனம் திருந்தி கடவுளிடம் வருவோம். அழிவிலிருந்து காப்பாற்றப்படுவோம்.

- ஆமென்.



# தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

வி.ப. 3 : 1–8, 13–15, 1 கொரி. 10 : 1–6, 10–12,
லூக். 13: 1–9,

**20-03-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

திருவருட் சாதனங்கள் வழியாகவும், மனமாற்றத்தின் வழியாகவும் பாவங்கள் என்னும் காலணிகளை கழற்றிவிட்டு, புனிதமிகு இறை சந்நிதானத்தை நாடி, நற்கனி தரும் மனிதர்களாக வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் தவக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

கிறிஸ்து என்னும் ஆன்மீக உணவை உண்டு, கிறிஸ்து என்னும் ஆன்மீக பானத்தைப் பருகி, மனம் மாற்றம் பெற்று கிறிஸ்துவுக்கு உகந்தவர்களாய் வாழ இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது.

நம் வாழ்வு எத்தனைதான் துயரம் நிறைந்ததாய் இருந்தாலும், கண்ணீரே நமக்குப் பானமாகினும், நம் கண்ணீரைத் துடைக்க ஒருவர் இருக்கிறார். நம் துயரங் களைப் போக்க ஒருவர் இருக்கிறார். நமக்காகக் கடவுளிடம் பரிந்துரைக்க ஒருவர் இருக்கிறார். அவர்தான் இறை மகன் இயேசு என்ற நம்பிக்கையைத் தருகிறது இன்றைய வழிபாடு.

பரிசேயர்கள் இறைவனைக் கண்டிப் பானவனராக, தண்டிப்பவராக, நீதிபதியாக பார்த்தனர். இயேசுவோ இறைவனை பாசமுள்ள, பரிவுள்ள, மன்னிக்கின்ற தந்தையாக வெளிப்படுத்துகிறார்.

அன்று இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட, அத்திமரத்திற்கு கொடுக்கப்பட்ட வாய்ப்பு இன்று நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப் படுகிறது. இந்த வாய்ப்பை நாம் விட்டு விடாமல் சரியாகப் பயன்படுத்திக்கொள் வோம். ஆண்டவரின் இரக்கத்தை உணர்ந்தவர்களாக அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி அவர், எதிர்பார்க்கின்ற பலனைத் தருபவர்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

எகிப்தில் அடிமைகளாக அவதியுற்ற இஸ்ரயேலரை மீட்க கடவுளால் தேர்ந்தெடுக் கப்பட்ட மோசேவுக்கு ஆண்டவராகிய கடவுள் எரியும் முட்செடியில் காட்சி அளித்த நிகழ்வே இன்றைய முதல் வாசகம். பாவத்திலிருந்து விடுதலை பெறவும், கவலைகளில் இருந்து விடுதலை பெறவும், எரியும் புதரிலே எரியாது நின்று இருக்கின்றவராக இருக்கிறவர் நானே என இறைவன் தானே தன் பெயரை வெளிப்படுத்தும் இவ்வாசகத்தை கவன முடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரயேல் மக்கள் மோசேயால் விடுவிக்கப் பட்டு, கானான் தேசத்தை நோக்கிப் பயணப் பட்டபோது அவர்கள் வாழ ஆன்மீக உணவையும், ஆன்மீக ஊற்றையும் இறைவன் வழங்கினார். தேவை நிறை வேறியதும் அவர்கள் தேவனுக்கு எதிரான காரியங்களைச் செய்து அழிவுக்கு உள்ளா னதை சுட்டிக்காட்டி, அதேபோன்று நமக்கும் நடந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கிறார் பவுலடிகள். பழைய ஏற்பாடு நிகழ்ச்சிகளை நினைவுப்படுத்தி நம்மை விசுவாசத்தில் திடப்படுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) இருக்கின்றவராக இருக்கிறவர் நானே என்றுரைத்த அன்பு இறைவா, உலக மாந்தர் அனைவரும் உண்டு வாழ ஒரே ஆன்மீக உணவையும், அவர்கள் பருகி மகிழ ஒரே ஆன்மீக நீரையும் வழங்க, நீர் தேர்ந்து கொண்ட உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும், நாங்கள் மனம் மாறி திருந்தி வாழ உம்மிடம் பரிந்து பேசும் அவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும், ஆன்மீக பலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) கண்ணயராது உறங்காது எம்மை காத்து வரும் தந்தையே இறைவா, உமக்கு விருப்பமில்லாத வாழ்க்கை வாழாமல், மனமாற்றம் பெற்று, உமக்கு விருப்பமுள்ள வாழ்க்கை வாழ நாங்கள் முயற்சி எடுக்கவும், பிறரை குற்றவாளிகள் என்று தீர்ப்பிடும் தவறான போக்கிலிருந்து விலகி வாழவும், உண்மையான மனமாற்றத்தை செயலில் காட்டி கனி தரும் வாழ்வு வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) எங்களுக்கு கோட்டையாகவும் அரணாகவும் விளங்கும் அன்பு இறைவா, பரிந்துரை, பரிவு, இரக்கம், கருணை, மன்னிப்பு, எந்த நிலையிலும் அடுத்தவரை ஏற்றுக் கொள்ளுதல், மனம் மாறுதல் இவையே கிறிஸ்துவத்தின் மதிப்பீடுகள் என்பதை உணர்ந்து, அவற்றை முழுமையாக ஏற்று வாழ்வாக்கி வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அமைதியின் அரசே, இறைவா, போர்புரியும் நாடுகள் மனம் திருந்தி அமைதிப் பாதைக்குத் திரும்பவும், உலகம் அமைதி பூங்காவாகத் திகழவும். போரால் இறப்புகளையும் இழப்புகளையும் சொல்லொண்ணா வேதனைகளையும் சந்தித்து வரும் மக்களுக்காகவும் உம்மை மன்றாடுகிறோம். போர் புரியும் நாடுகளின் தலைவர்கள் பகைமையையும், பிரிவினை எண்ணங்களையும், வேறுபாடுகளையும் களைந்து, சமாதானத்தின் கருவிகளாக செயல்பட்டு அமைதி பேச்சுவார்த்தை மூலம் உலகில் ஒற்றுமையையும், சமாதானத்தையும் நிலைநிறுத்த அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.




## திரு.வி.க.வின் கிறிஸ்து மொழிக் குறள்



**மன்னுயிர்கள் மாசழிக்கும் வன்மூர்க்க வேறறுக்கும்**
**பொன்மொழியின் பேச்சே பொருள்**

நிலைபெற்ற உயிரையுடைய மக்களின் குற்றங்களை அழித்துவிடும் கொடிய கடுமையான சினத்தை அடியோடு முற்றிலும் ஒழித்துவிடும். இத்தகைய அழகான மலை அருளுரையின் மொழியே பொருளாகும்.

மன்னுயிர் – நிலை பெற்ற உயிரையுடைய மக்கள் (பிறந்தவர், இறக்க, மக்கள் பிறக்க உலகில் மக்கள் இருந்துகொண்டே இருப்பதால் மன்னுயிர் என்றார்.)

மாசு – குற்றம், வேர் அறுக்கும் – முற்றிலும் ஒழிக்கும், பொன் – அழகு.



# ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு

**25-03-2022**

எசா. 7:10-14, 8:10.
எபி. 10:4-10, லூக். 1:26-38




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

கடவுள் எங்களோடு இருக்கிறார் என்ற மகிழ்வோடும், உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறோம் என்ற ஆர்வத்தோடும் இறை சந்நிதானம் நோக்கி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா திருப்பலிக்கு அன்புடன் வரவேற்கிறேன்.

மனித சமுதாயத்தின் தொடக்கத்திலேயே வாக்களிக்கப்பட்டு, இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்டு, இஸ்ரயேல் இனத்தவரால் எதிர்பார்க்கப்பட்ட இறைமகனின் பிறப்பு பற்றிய அறிவிப்பை பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ தாய் திருச்சபை நம்மை அழைத்துள்ளது.

உலக வரலாற்றில் ஒரு பெண்ணின் ஆம் என்ற ஒற்றைச் சொல் ஒரு மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்து, ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திவிட்டது. ஆம் என்ற அந்த ஒற்றைச்சொல் உலக வரலாற்றை கிமு, கிபி என்று இருகூறாகப் பிரித்துவிட்டது.

யாருக்குப் பணிவது சிறந்தது? உடலைக் கொல்லவல்ல உலகத்திற்கா? அல்லது ஆன்மாவைக் கொல்லும் வல்லமை கொண்ட கடவுளுக்கா? என்ற கேள்விகளை எழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

மரியாள் கடவுளின் பார்வையில் பேறு பெற்றவளாக, கருணையடைந்த பெண் மணியாக, அருள் மிகப் பெற்றவளாக படம் பிடித்து காட்டுகிறது இன்றைய வார்த்தை வழிபாடு. இறைவனின் திட்டத்திற்கு நாம் என்றும் ஆம் என்று சொல்பவர்களாய் இருக்க வேண்டும் என்பதை அன்னை மரியா வழியாக நமக்குக் கற்றுத் தருகிறது.

கன்னி மரியாள் எவ்வாறு இறைத் திட்டத்தில் பங்கெடுத்து, கடவுளின் அருளை தான் பெற்றதோடு அல்லாமல் நாமும் பெற வழி வகுத்தாளோ அவ்வாறே நாமும் கடவுளின் விருப்பம் அறிந்து செயல்பட, உமது விருப்பப்படியே நிகழட்டும் என்று இறைவனின் கரங்களில் நம்மையே நாம் ஒப்புக்கொடுப்போம். அதற்காக இறை யருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

மக்களை மீட்க கன்னிப் பெண் ஒருவள் கருத்தாங்கி ஒரு மகவைப் பெற்றெடுப்பாள் என்ற முன்னறிவிப்பை சுமந்து வருகிறது இன்றைய முதல் வாசகம். கிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட இந்த இனிய இறைவாக்கை கவனமுடன் கேட்டு மகிழ்வோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

புதிய பலியான இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப் பலியின் மேன்மையை எடுத்து ரைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். மரியாவின் ஆம், இயேசுவின் ஆம் இரண்டுமே உலக மீட்புக்கு அடிப்படையாக இருந்தன என்பதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

# வத்திக்கான் செய்திகள்

## அன்பால் மட்டுமே மனித குடும்பத்தை காப்பாற்ற இயலும்



கல்வி பற்றி நினைக்கின்றபோது சிறார் மற்றும் இளையோர்பற்றி நினைக்கின்றோம், இப்போது போர்முனையில் நிற்க அனுப்பப்படும் பல இளம் இரஷ்ய மற்றும், உக்ரைன் படைவீரர்களை நினைக்கின்றோம்.

– திருத்தந்தை பிரான்சிஸ்

இளையோருக்கு, சனநாயகம் மற்றும், அன்புக் கலாச்சாரம் ஆகியவற்றின் பாதையைக் கற்றுக்கொடுக்கும் பணியைத் தொடர்ந்து ஆற்றுமாறு, Gravissimum Educationis பாப்பிறை அமைப்பு நடத்திய பன்னாட்டு கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளிடம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பிளவுபட்டுள்ள ஓர் உலகில், சனநாயகத்தைக் கற்றுக்கொடுத்தல் என்ற தலைப்பில் இவ்வமைப்பு நடத்திய இக்கருத்தரங்கத்தில் கலந்துகொண்ட ஏறத்தாழ நூறு பிரதிநிதிகளை, மார்ச் 18, இவ்வெள்ளியன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, அழிவின் பாதை கழிவுகளையே உற்பத்திசெய்யும், மாறாக அன்பால் மட்டுமே மனிதக் குடும்பத்தை காப்பாற்ற இயலும் என்று கூறினார்.

உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் குறித்து முதலில் பேசிய திருத்தந்தை, தொலைவில் நடைபெறும் போர்கள் குறித்த செய்திகளைக் கேட்பதில் நாம் பழக்கப்பட்டுவிட்டோம், ஆனால் இப்போது நமக்கு நெருங்கிவந்துள்ள போர், மனித இயல்பு எவ்வளவு கொடூரமானது என்பதை சிந்திக்க வைத்துள்ளது என்று கூறினார்.

கல்வி பற்றி நினைக்கின்றபோது சிறார் மற்றும் இளையோர்பற்றி நினைக்கின்றோம், போர்முனையில் நிற்க அனுப்பப்படும் பல இளம் படைவீரர்களை, இளம் இரஷ்ய படைவீரர்களை, இளம் உக்ரைன் படைவீரர்களை, போர்ப் பகுதிக்கு அருகில் வாழ்கின்ற இளையோரை, சிறுவர் சிறுமியரை நினைக்கின்றோம் என்று, அவர்கள்மீது இரக்கம்கொண்டு திருத்தந்தை கூறினார்.

### நியாயமான போர்கள் என்று எதுவுமில்லை

போர் இடம்பெறும் இவ்வேளையில், கிறிஸ்தவனாகிய நான் என்ன செய்கிறேன்?, செபிக்கின்றேனா?, உண்ணாநோன்பு இருக்கின்றேனா? தவம் செய்கின்றேனா? அல்லது எதைப்பற்றியும் அக்கறை இல்லாமல் வாழ்கின்றேனா? என்பதை சிந்தித்துப் பார்க்குமாறு அழைப்புவிடுத்த திருத்தந்தை, உரோம் பம்பினோ இயேசு சிறார் மருத்துவமனையில் குண்டுகளால் காயமடைந்த சிறார் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

எந்தவொரு போரும் எப்போதுமே மனித சமுதாயத்தின் தோல்வியே என்று திரும்பத் திரும்பக் கூறியத் திருத்தந்தை, கல்வித்துறையில் பணியாற்றும் கல்வியாளர்களாகிய நாம் இந்தப் போரால் தோல்வியடைந்துள்ளோம், ஏனெனில் இதற்கு நாமும் ஒருவகையில் பொறுப்பு என்றும், நியாயமான போர்கள் என்று எதுவுமே இல்லை என்றும் கூறினார். கடவுளின் பணியில் நாம் அனைவரும் ஒத்துழைப்பாளர்கள் என்றுரைத்த திருத்தந்தை, அழிவின் பாதையை எளிதில் எடுக்கலாம், ஆனால் அது பெரும் சேதங்களையே கொணரும் என்றும் கூறினார்.

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## தவக்காலத்தின் முதல் ஞாயிறு

**20.03.2022 – ஞாயிற்றுக்கிழமை**

**முதல் வாசகம்** : வி. பயணம் 3: 1-8,13-15
**இரண்டாம் வாசகம்** : 1 கொரி 10: 1-6,10-12
**நற்செய்தி** : லூக்கா 13: 1-9

**21.03.2022 – திங்கட்கிழமை**

**முதல் வாசகம்** : 2 அரசர்கள் 5: 1-15
**நற்செய்தி** : லூக்கா 4:24-30

**22.03.2022 – செவ்வாய்கிழமை**

**முதல் வாசகம்** : தானியேல் 1: 2, 11-19
**நற்செய்தி** : மத்தேயு 18:21-35

**23.03.2022 – புதன்கிழமை**

**முதல் வாசகம்** : இணைச்சட்டம் 4: 1,5-9
**நற்செய்தி** : மத்தேயு 5:17-19

**24.03.2022 – வியாழக்கிழமை**

**முதல் வாசகம்** : எரேமியா 7: 23-28
**நற்செய்தி** : லூக்கா 11:14-23

**25.03.2022 – வெள்ளிக்கிழமை**

**முதல் வாசகம்** : எசாயா 7: 10-14; 8: 10b
**இரண்டாம் வாசகம்** : எபிரேயர் 10: 4-10
**நற்செய்தி** : லூக்கா 1:26-38

**26.03.2022 – சனிக்கிழமை**

**முதல் வாசகம்** : ஓசேயா 6: 1-6
**நற்செய்தி** : லூக்கா 18:09-14

**"Unless there is Good Friday in your life, there can be no Easter Sunday."**

- Fulton J. Sheen -






# திருவிவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட

## தித்திக்கும் திருக்குறள்

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.**

அதிகாரம் 13

அடக்கமுடைமை

குறள் - 125

**பொருள் :**

பணிவு உடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லோருக்கும் நல்லதாகும். அவர்களுள் சிறப்பாகச் செல்வர்க்கே மற்றொரு செல்வம் போன்றதாகும்.

ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும்; அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம்.

(நீதிமொழிகள் 10:22)

பவுல் சிசிலியா நாட்டின் தர்சீசு நகரில் பிறந்தவர். அவரது தந்தை உரோமக் குடிமகனாவார். அவரது குடும்பம் மிகவும் செல்வந்த குடும்பம் ஆகும். இஸ்ரவேலின் பெஞ்சமின் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பரிசேயராவார். இளமையிலேயே எபிரேய மொழி கற்று யூத கல்வியறிவில் நன்கு தேர்ச்சி பெற்றவர். கமாலியேலின் காலடியில் அமர்ந்து திரு சட்டங்களில் நுட்பமாக பயிற்சி பெற்றவர் . ஆண்டவரை குறித்து வைராக்கியமாக இருந்தவர். அதனால்தான் இயேசு ஆண்டவர் பாவிகளை நேசித்து மீட்க இவ்வுலகத்திற்கு வந்திருக்கும், இறைமகன் என்பதை அறியாமல் இயேசுவையும், இயேசுவைக் குறித்து சாட்சி சொல்பவர்களையும் வெறுத்து அவர்களைக் கொல்வதற்காக அரசு ஆணை பெற்று வந்தவர்.

வழியில் இயேசு இடைப்பட்டு அவரை தேர்ந்து கொண்ட பின்னர் அனைத்து உலக வாழ்வையும் சவுல் விட்டுவிட்டு எளிமையுடன் இயேசுவுக்காக வாழ்ந்து தன் உயிரைக் கொடுத்து சாட்சியானார். அவர்தம் வாழ்வில் இயேசுவின் பெயரால் பல அற்புத அடையாளங்களை செய்தவர். பல நிருபங்களை எழுதியவர். ஒரு சமயம் முடவனை எழுந்து நடக்க வைத்தார். இதனைக் கண்டு 'உயிருள்ள தெய்வம் இவரே' என அவரைத் தெய்வமாக்க எண்ணி பலிபொருட்களுடன் ,பலியிட மக்கள் முன்வந்தபோது, பெருமைக்கொள்ளாமல், அது தவறு என அறிவுறுத்தி எதையும் ஏற்றுக்கொள்ள மறுத்தார். தேவையற்ற பாராட்டுகளையும், புகழையும் புறக்கணித்து மக்களுக்கு இயேசுவை மட்டும் அறிக்கை செய்தார்.

லிஸ்திராவில் கால் வழங்காத ஒருவர் இருந்தார்.

பிறவிலேயே கால் ஊனமுற்றிருந்த அவர் ஒருபோதும் நடந்ததில்லை. அவர் அமர்ந்து

பவுல் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் நலம் பெறுவதற்கான நம்பிக்கை இருப்பதைக் கண்டு பவுல் அவரை உற்றுப்பார்த்து

உரத்த குரலில், 'நீர் எழுந்து காலூன்னறி நேராக நில்லும்' என்றார். அவர் துள்ளி எழுந்து நடக்கத் தொடங்கினார். பவுல் செய்ததைக் கூட்டத்தினர் கண்டு லிக்கவோனிய மொழியில், 'தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன' என்று குரலெழுப்பிக் கூறினர். அவர்கள் பர்னபாவைச் 'சேயுசு' என்றும், அங்குப் பவுலே பேசியபடியால் அவரை 'எர்மசு' என்றும் அழைத்தார்கள். நகருக்கு எதிரிலுள்ள சேயுசு கோவில் அர்ச்சகர் காளைகளையும் பூமாலைகளையும் கோவில் வாயிலுக்குக் கொண்டு வந்து கூட்டத்தினருடன் சோந்து பலியிட விரும்பினார்.

இதைக் கேள்வியுற்ற திருத்தூதர் பர்னபாவும் பவுலும் தங்கள் மேலுடைகளைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள் பாய்ந்து சென்று உரக்கக் கூறியது;

‘மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தாம்; நீங்கள் இந்தப் பயனற்ற பொருள்களை விட்டுவிட்டு, விண்ணையும் மண்ணையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிய வாழும் கடவுளிடம் திரும்புங்கள் என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

கடந்த காலங்களில் அவர் அனைத்து மக்களினங்களையும் அவரவர் வழிகளில் நடக்கும்படி விட்டிருந்தார்;

என்றாலும் அவர் தம்மைப் பற்றிய சான்று எதுவும் இல்லாதவாறு விட்டுவிடவில்லை. ஏனெனில் அவர் நன்மைகள் பல செய்கிறார்; வானிலிருந்து உங்களுக்கு மழையைக் கொடுக்கிறார்; வளமிக்க பருவ காலங்களைத் தருகிறார்; நிறைவாக உணவளித்து உங்கள் உள்ளங்களை மகிழ்ச்சி பொங்கச் செய்கிறார்.‘

இவற்றை அவர்கள் சொன்னபின்பு கூட்டத்தினர் தங்களுக்குப் பலியிடுவதை ஒருவாறு தடுக்க முடிந்தது.

(திருத்தூதர் பணிகள் 14:8-18)

இவ்வாறு இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கை செய்வதிலும் நற்செய்திப் பணியை செய்வதிலும் உண்மையோடும், கருத்தோடும் எல்லா செல்வங்களுக்கும் மேலாக இயேசுவை பெரும் செல்வமாக எண்ணியே வாழ்ந்தார். பணிவும், அன்பும் எங்குள்ளதோ அங்கு இறைவன் ஞானத்தை வழங்கி அங்கே குடியிருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்று விளங்கினார்.

உண்மையில், என்னைப் பொறுத்தமட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்றச் செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருகிறேன்.

(பிலிப்பியர் 3:8)

உரோமை குடிமகன் என்ற உரிமை மிகப் பெரிய செல்வம். ஆனால் பவுல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தம் வாழ்வாக்கிய பின்னர் இயேசுவின் சீடராக நிலை வாழ்வுக்கு ஏற்ற மாபெரும் சிறப்பான சீடர் எனும் அருட்கொடையை பெற்றார்.

விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள் யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்.

(மத்தேயு நற்செய்தி 13:46).

நாமும் அவரைப் போல மேலான விண்ணரசினைப் பெற நல்ல சாட்சிகளாய் மாறுவோம்; வாழ்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

**–லீமா விக்டோரியா**



# திருவிவிலியத்தோடு திருக்குறளும் பழப்போம்...